# <u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2022–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ஆம் நாள், திங்கட்கிழமை

**<u>I.A. No. 2 of 2020 in O.S. No. 150 of 2020</u>**

**<u>(CNR No. TNSA-13000-209-2020)</u>**

தமிழரசன் .. மனுதாரர் / வாதி

எதிராக

1. கணேசன்
2. கருணாநிதி
3. பழனிமுத்து .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது கடந்த 08.04.2022–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. குமரவேல் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 வரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ரவி அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்துக்கு செல்வதற்கு மனு A–அட்டவணை சொத்துக்களில் வண்டித்தடம்

எதுவும் அமைக்கக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், மனுதாரரோ அவரது ஆட்களோ B–அட்டவணை சொத்திலுள்ள பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சென்று A–அட்டவணை சொத்தில் பயிர் செய்வதை எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ தடை செய்யக்கூடாது என்று ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்திலிருந்து A–அட்டவணை சொத்துக்கு செல்லுமாறு அமைத்துள்ள கால்வாய் மற்றும் பைப்லைனை சேதப்படுத்தக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் மற்றும் மனு A–அட்டவணை சொத்துக்களை சுற்றி மனுதாரர் வேலி அமைப்பதை எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ தடை செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>**மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :**</u> மனுதாரர் / வாதி மேற்படி வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். 3–ம் எதிர்மனுதாரர், மனுதாரர் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஆவார். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் அவர்களது கூட்டுக்குடும்ப சொத்துக்களை கடந்த 05.07.2000 அன்று பாகம் பிரித்துக் கொண்டனர். அப்பாகப்பிரிவினைப் பத்திரத்தில் A–அட்டவணை குடும்ப பொதுப்பணம் 3–ம் எதிர்மனுதாரருக்கும், B–அட்டவணை சொத்துக்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கும், C–அட்டவணை சொத்துக்கள் 2–ம் எதிர்மனுதாரருக்கும், D–அட்டவணை சொத்துக்கள் மனுதாரருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினையில் மனுதாரரின் பாகமாக ஒதுக்கப்பட்ட D–அட்டவணை சொத்துக்களே இம்மனுவின் A அட்டவணை சொத்துக்களாகும். B–அட்டவணை சொத்துக்கள் மனுதாரர் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட

பொது கிணறாகும். மேற்படி பாகத்திற்கு பின்னர் A மற்றும் B அட்டவணை சொத்துக்கள் மனுதாரர் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனு A–அட்டவணையில் உள்ள சொத்துக்களை, மனு B–அட்டவணையில் உள்ள பொது கிணற்று நீர் மூலம் பயிர் செய்து அனுபவம் செய்து வருகின்றார். B–அட்டவணையில் உள்ள பொது கிணற்றில் மனுதாரருக்கு 5–ல் 1–1/2 பாகமும், 1–ம் எதிர்மனுதாரருக்கு 2 பாகமும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 1–1/2 பாகமும் ஒதுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவர்கள் பொது கிணற்றில் உள்ள மின் இணைப்பு மற்றும் மோட்டார் பம்புசெட் மூலம் தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்து வருகின்றனர். B–அட்டவணையில் உள்ள கிணற்றிலிருந்து மனுதாரர் பைப்லைன் மற்றும் வாய்க்கால் மூலம் A–அட்டவணை சொத்துக்கு தண்ணீர் செல்லும் வகையில் அமைத்துள்ளார். பாகப்பிரிவினை ஏற்பட்ட உடனே அவ்வாறு பைப் மற்றும் வாய்க்காலை வாதி அமைத்துள்ளார். மனுதாரர் மேற்படி பாகத்திற்கு பின்னர் வேறு சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் மேற்படி பாகப்பிரிவினைக்குப் பின்னிட்டு சுமுகமான உறவு இல்லை. அதனால் மனுதாரர் மீது விரோதம் கொண்ட எதிர்மனுதாரர்கள் மனுதாரருடன் விரோதம் கொண்டு B–அட்டவணையில் உள்ள பொது கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்வதற்கு இடையூறு செய்து வருகின்றனர். மேலும் எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட A–அட்டவணை சொத்தில் B–அட்டவணை சொத்துக்கு செல்லும் வகையில் வண்டித்தடம் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு மனுதாரர் ஒப்புக்கொள்ள மறுக்கவே மனுதாரர் B–அட்டவணை கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்ல இடையூறு செய்து வருகிறார்கள். இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் அவர்களது ஆட்களுடன் B–அட்டவணை கிணற்றிலிருந்து A–அட்டவணை சொத்துக்கு செல்லும் பைப்லைன் மற்றும் கால்வாயை சேதப்படுத்திவிட்டனர். அதை வாதி செலவு செய்து சீர் செய்துள்ளார். மீண்டும் மீண்டும் எதிர்மனுதாரர்கள் அதுபோல்

.. 4 ...

செய்து வருகிறார்கள். 1, 2 எதிர்மனுதாரர்கள் B–அட்டவணை கிணற்றிலிருந்து அவர்களது நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்து வருகிறார்கள். எனவே மனுதாரர் B–அட்டவணை கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்றால் எதிர்மனுதாரர்களும் எடுக்கக்கூடாது என்று கூறி வந்தார். ஆனாலும் எதிர்மனுதாரர்கள் அவர்களது நிலங்களுக்கு B–அட்டவணை கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்து வருகிறார்கள். மேலும் எதிர்மனுதாரர்கள் A–அட்டவணை சொத்தில் கால்நடைகளை வைத்து பயிர்களை சேதப்படுத்தி வருகிறார்கள். எனவே மனுதாரர் அவரது நிலத்தை சுற்றி வேலி அமைக்க முற்பட்டார். அதற்கும் எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருகிறார்கள். 05.07.2000 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் மனு B–அட்டவணை பொது கிணற்றிலிருந்து A–அட்டவணை சொத்துக்கு தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமையுள்ளது. ஆனால் அதை எதிர்மனுதாரர்கள் தடுத்து வருகின்றனர். கடந்த 14.09.2020 அன்று எதிர்மனுதாரர்களால் சேதப்படுத்தப்பட்ட வாய்க்கால் மற்றும் பைப்லைனை மனுதாரர் சீர் செய்ய முயற்சித்தபோது, எதிர்மனுதாரர்கள் மீண்டும் பைப்லைனை சேதப்படுத்திவிட்டார்கள். எனவே அது குறித்து வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது அவர்கள் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். எனவே மேற்படி பரிகாரங்கள் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்</u> : மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலம் பொய்யானதாகும். அவைகளை மனுதாரரே சட்டப்படி நிரூபிக்க வேண்டும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்துக்கள் 05.07.2000 அன்று பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது. அதில் A–அட்டவணை குடும்ப பணம்

.. 5 ...

3–ம் எதிர்மனுதாரருக்கும், B–அட்டவணை சொத்துக்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கும் C–அட்டவணை சொத்துக்கள் 2–ம் எதிர்மனுதாரருக்கும் D–அட்டவணை சொத்துக்கள் மனுதாரருக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினையின்போது மூன்று மகன்களும் அவர்களது தகப்பனாருக்கு வருடந்தோறும் பராமரிப்புத் தொகை கொடுக்க வேண்டுமென்றும், 20 செண்ட் நிலம் அவருக்கு ஒதுக்க வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினையின்போதே, சர்வே எண் 50/1 நிலத்தின் தென்புறம் குடும்பத்தினர் மட்டும் செல்லக்கூடிய பொதுப்பாதையை 4 அடி அகலத்தில் ஆற்று புறம்போக்கு நிலம் மற்றும் மருதயன் கோவில் நிலம் வரை செல்லுமாறு அமைக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அதன் பின்னிட்டு மனுதாரர் அவ்வாறு பொதுப்பாதை அமைக்க ஒப்புக்கொள்ளாததால் அதுபோல் பொதுப்பாதை அமைக்கவில்லை. எனவே அப்பாதை அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. மனுதாரர், 3–ம் எதிர்மனுதாரருக்கு பராமரிப்புத் தொகையை கொடுக்க தவறிவிட்டார். அது குறித்து கேட்டதற்கு மனுதாரர், 3–ம் எதிர்மனுதாரர் மீது கோபம் கொண்டு எதிர்மனுதாரர்கள் அவர்களது சொத்துக்களை அனுபவித்து வருவதற்கு இடையூறு செய்து வருகிறார்கள். மனுதாரர் கடந்த 09.08.2020 அன்று கூட்டு கிணற்றிலுள்ள கூட்டு மோட்டார் பம்புசெட் மற்றும் பைப்லைன் சர்வே எண் 50/1–ல் உள்ள நிலத்திற்கு செல்வதை சேதப்படுத்திவிட்டார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மோட்டார் பம்புசெட் மற்றும் அதன் உபகரணங்களை சேதப்படுத்திவிட்டார். அதனால் எதிர்மனுதார்கள் அவர்களது நிலங்களில் பயிர் செய்ய இயலாததால் பயிர்கள் காய்ந்துவிட்டது. 08.11.1976 தேதியிட்ட கிரயப்பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் 50/4–ல் உள்ள கிணற்றில் தண்ணீர் இல்லாமல் வற்றிவிட்டதால் அக்கிணறு இருந்த இடத்தை தூர்த்துவிட்டனர். மனுதாரர் நிலத்துக்கும். எதிர்மனுதாரர் வீட்டிற்கும் இடையில் சர்வே எண் 50/8–ல் பாசன வாய்க்கால் ஒன்று செல்கிறது. மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் B–அட்டவணையில் உள்ள

.. 6 ...

கூட்டு கிணற்றை மாதா கோவிலிலிருந்து செல்லும் பாதையின் வழியாக சென்றும், சர்வே எண் 50/3, 5, 6, 7 நிலத்தில் பூமிக்கடியில் பைப்லைன் அமைத்தும் பயிர் செய்து வருகிறார்கள். ஆனால் மனுதாரர் மேற்படி பாதையை தனது நிலத்துடன் இணைத்துக்கொள்ள முயற்சித்து வருகிறார். மனுவில் சொல்லப்பட்டுள்ள A மற்றும் B–அட்டவணை சொத்துக்கள் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் அல்ல. சர்வே எண் 50/6, 50/7 மற்றும் 50/12–ல் உள்ள சொத்துக்களில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது. எனவே சர்வே எண் 50/8–ல் உள்ள சொத்தானது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் சொந்தமான சொத்துக்களாகும். சர்வே எண் 50/1–ல் மனுதாரருக்கு 5–ல் 1–1/2 பாகம் உரிமையுள்ளது உண்மை. 1–ம் எதிர்மனுதாரருக்கு 2 பாகமும் 2–ம் எதிர்மனுதாரருக்கு 1–1/2 பாகமும் உரிமையுள்ளது. இருதரப்பினரும் சர்வே எண் 50/1–ல் உள்ள கிணற்றிலிருந்து சர்வே எண் 50/8–ல் உள்ள வீடு வரை செல்வதற்கு வாய்க்காலை பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மனுதாரர் அவரது நிலத்தில் வேலி அமைத்ததால், கூட்டு உரிமையாளர்களாக உள்ள எதிர்மனுதாரர்கள் அவர்களது கூட்டு கிணறு மற்றும் பொது சொத்துக்கு செல்ல இயலாமல் போய்விடும். மேலும் மனுதாரர் அவரது தகப்பனாருக்கு பராமரிப்புத் தொகை கொடுக்காததால் அதை கொடுக்குமாறு 1, 2 எதிர்மனுதாரர்கள் கேட்டார்கள். ஆனால் அதை பொருட்படுத்தாத மனுதாரர் பைப்லைனை சேதப்படுத்தியும் பொது கிணற்று மோட்டார் பம்புசெட்டையும் சேதப்படுத்தியுள்ளார். அதனால் எதிர்மனுதாரர்களுக்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே கடந்த 12.08.2020 அன்று 3–ம் எதிர்மனுதாரர் கெங்கவல்லி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். மாவட்ட ஆட்சியரிடமும் ஒரு புகார் கொடுத்தார். அதே போல் 1–ம் எதிர்மனுதாரர் கடந்த 28.08.2020 அன்று காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். அதன் பின் போலீஸ் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் 09.09.2020 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு ஒரு புகார் அனுப்பினார். 08.12.2020 அன்று ஆத்தூர் துணை கண்காணிப்பாளருக்கு ஒரு புகார் அனுப்பினார். அதன் பின்

போலிசார் விசாரித்த பின்னர் இருதரப்பினரும் நீதிமன்ற உத்தரவின்படி செயல்பட வேண்டுமென்று கூறினார். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் இந்நீதிமன்ற உத்தரவு இல்லாமல் மனுதாரர், கூட்டு உரிமையாளர்களான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். மேலும் மனுதாரர், எதிர்மனுதாரர்களின் வீட்டிற்கு செல்லும் பைப்லைன் மற்றும் பொது கிணற்றின் மோட்டார் பம்புசெட்டை சேதப்படுத்தி அதை கிணற்றில் வீசி எறிந்துவிட்டார். அதை சரி செய்ய எதிர்மனுதாரர்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. எனவே எதிர்மனுதாரர்கள் அவர்களது சொந்த செலவில் பொது மோட்டார் அமைத்துள்ளனர். கூட்டு உரிமையாளர்களுக்கு எதிராக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் எதுவும் வழங்க இயலாது என்ற அடிப்படையில் இம்மனுவில் கோரிய பரிகாரம் எதுவும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. சேதப்படுத்தப்பட்ட பைப்லைன் மற்றும் மோட்டார் பம்புசெட்டை மீண்டும் சரி செய்ய பரிகாரம் கேட்காமல் மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. மேலும் மனுதாரர் ஏற்கனவே பொது கிணற்றின் மோட்டார் பம்புசெட்டை சேதப்படுத்தி பொது கிணற்றிலேயே வீசிவிட்டதாலும், பூமிக்கடியில் உள்ள பைப்லைனை சேதப்படுத்திவிட்டதாலும் மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. ***இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் / வாதி, மனுவில் கோரியுள்ளவாறு நான்கு இடைக்கால் உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் மனுதாரர் / வாதிக்குக் கிடைக்கத்தக்கதா, இல்லையா என்பதே ஆகும்.***

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. இம்மனுவினை மனுதாரர் / வாதி நான்கு வகையான இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அவைகளில், முதலாவது பரிகாரமாக, மனு 'B' அட்டவணை சொத்துக்கு செல்வதற்கு, மனு 'A' அட்டவணை சொத்தில் வண்டித்தடம் எதுவும் அமைக்கக்கூடாது என்றும், நான்காவது பரிகாரமாக, மனுதாரர் / வாதி, மனு 'A' அட்டவணை சொத்துக்களைச் சுற்றி வேலி அமைத்துக் கொள்வதை எதிர்மனுதாரர்கள் தடை செய்யக்கூடாது என்று கேட்டுள்ளார். இவ்விரு பரிகாரங்கள் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதைப் பொறுத்து இரு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்குப் பின்னிட்டே இறுதி செய்ய முடியும். எனவே, இவ்விரு பரிகாரங்கள் இம்மனுவில் மனுதாரர் / வாதி தற்சமயம் அடையத்தக்கதவர் இல்லை என்று முதலில் முடிவு செய்யப்படுகின்றது.

7. அடுத்ததாக, மனுவில் 2, 3–வது பரிகாரங்களாக, மனு 'B' அட்டவணை கிணற்று நீர் மூலம், மனு 'A' அட்டவணை சொத்துக்களை மனுதாரர் பயிர் செய்து அனுபவித்து வருவதற்கு எதிர்மனுதாரர்கள் இடைஞ்சல், தடங்கல் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு மனு 'B' அட்டவணையில் உள்ள கிணற்று நீரை 'A' அட்டவணை சொத்துக்கு பைப்லைன் மூலம் கொண்டு செல்லுமாறு அமைத்துள்ளதை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ தடை செய்யக்கூடாது என்றும் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கேட்கப்பட்டுள்ளது.

8. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்திலும், மனுவிலும், மனு 'B' அட்டவணை சொத்தில் உள்ள கிணர், மோட்டார், பம்புசெட்டில் 05.07.2000 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி மனுதாரருக்கு 5–ல் 1–1/2 பாகமும், 1–ம் எதிர்மனுதாரருக்கு 5–ல் 2 பாகமும், 2–ம் எதிர்மனுதாரருக்கு 5–ல் 1–1/2 பாகமும் உரிமையுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

.. 9 ...

அதை எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 05.07.2000 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் 'D' அட்டவணை சொத்துக்களில், இம்மனுவின் 'A' அட்டவணை சொத்துக்கள் மற்றும் சில சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. அதேபோல், இம்மனுவின் 'B' அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் 50/1-ல் ஏக்கர் 0.03 செண்ட்டில் உள்ள பொது கிணற்றில் 5-ல் 1-1/2 பாகம், மின் இணைப்பு எண் 70, 5 எச்.பி. மின் மோட்டார் ஆகியவைகளில் 5-ல் 1-1/2 பாகம் மனுதாரரின் பாகமாக மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரத்தின் 'D' அட்டவணையில் ஒதுக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. மேலும், இம்மனுவின் 'B' அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள, மேற்படி கிணற்றுக்கு பாதையாக, சர்வே எண் 50/1-ல் கிணறு வரை ஆற்றுப் புறம்போக்கு மற்றும் மருதையான் கோயில் இடத்திலிருந்து தென்புறம் 4 அடி அகலமாக ஒதுக்கிய பாதையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரத்தின் பொது ஷராவில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, 'B' அட்டவணையில் உள்ள பொது கிணற்றிலிருந்து, 'A' அட்டவணையில் உள்ள சொத்துக்களில் மனுதாரர் பயிர் செய்வதை தடை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையுமில்லை என்று தெளிவாக தெரிய வருகின்றது.

9. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், மேற்படி பாகப்பிரிவினைக்குப் பின்னிட்டு, மனுதாரர் கிரயம் வாங்கிய சொத்துக்களுக்கும், தாவா 'B' அயிட்ட பொது கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு சென்று பயிர் செய்ய முயற்சித்து வருகிறார் என்றும், அவ்வாறு செய்ய உரிமையில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. பாகப்பிரிவினைப் பத்திரத்தில் மனுதாரரின் பாகத்திற்கு ஒதுக்கப்படாத, மனுதாரரால் கிரயம் பெற்ற சொத்துக்கு மனு 'B' அயிட்ட கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்ல மனுதாரருக்கு உரிமையில்லை என்பதை இவ்வுத்தரவிலேயே தெளிவுப்படுத்தப்படுகின்றது.

.. 10...

10. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேலும், பாகப்பிரிவினையின் போது, மனுதாரரும், 1, 2 எதிர்மனுதாரர்களும், அவர்களது தகப்பனாரான 3–ம் எதிர்மனுதாரரின் பராமரிப்புக்கு வருடம்தோறும் பணம் கொடுக்க வேண்டும் என்றும், அதை கேட்டதால்தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. 3–ம் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் பராமரிப்புத் தொகை கொடுக்கவில்லையெனில், 3–ம் எதிர்மனுதாரர் தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருப்பின், அவர் உரிய சட்டப்படி நடவடிக்கை எடுத்து பராமரிப்பு தொகை பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, மனு 'B' அட்டவணையில் உள்ள பொது கிணற்று நீரைக் கொண்டு, மனு 'A' அட்டவணை சொத்துக்களில் பயிர் செய்வதை தடை செய்ய இயலாது.

11. மனுதாரர் / வாதி, தாவா 'B' அட்டவணையில் உள்ள பொது கிணற்றிலிருந்து, 'A' அட்டவணைக்கு செல்லும் வாய்க்கால் மற்றும் பைப்லைனை எதிர்மனுதாரர்கள் சேதப்படுத்திவிட்டதாகவும், அதை மனுதாரர் அவ்வப்போது சீர் செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. மனுதாரரின் 'A' அட்டவணை சொத்துக்களுக்கு, 'B' அட்டவணை பொது கிணற்லிருந்து செல்லும் வாய்க்கால் மற்றும் பைப்லைனை எதிர்மனுதாரர்கள் சேதப்படுத்தினால், மனுதாரரால் 'A' அட்டவணையில் உள்ள சொத்துக்களை பயிர் செய்யாமல் பெருத்த இழப்பும், கஷ்ட, நஷ்டமும் ஏற்படும். எனவே, அதுபோல் பைப்லைன் மற்றும் பாசன வாய்க்காலை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் சேதப்படுத்த உரிமையில்லை என்பது தெளிவாகின்றது.

12. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் மேலும், மனு 'B' அயிட்ட சொத்துக்களைப் பொறுத்தவரை, மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் கூட்டு பங்குரிமையாளர்கள் என்றும், எனவே, கூட்டு பங்குரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க இயலாது என்றும் கூறப்பட்டுள்ளது. கூட்டுப் பங்குரிமையாளர், கூட்டு சொத்தை

*.. 11 ...*

அனுபவிக்கக் கூடாது என்றவாறான உறுத்துக் கட்டளைப் பரிகாரம்தான் வழங்க இயலாதே தவிர, ஒரு கூட்டுப் பங்குரிமையாளர், அவரது பாக சொத்தை அனுபவித்து வருவதை, மற்ற பாகஸ்தர்கள் தடை செய்யக்கூடாது என்றவாறான உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க தடை ஏதுமில்லை என்று முடிவு செய்து, மனுதாரர் / வாதி இம்மனுவில் கோரியுள்ள 2 மற்றும் 3–வது பரிகாரத்தைப் பெற உரிமையுள்ளவர்கள் என்று முடிவு செய்து இம்மனுவிற்கு தீர்வு காணப்படுகின்றது.

13. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லப்பட்டுள்ள இதர பொருண்மைகளைக் குறித்து, அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திற்குப் பின்னர் முடிவு செய்யப்படும் என்று இவ்வுத்தரவிலேயே தெளிவுப்படுத்தப்படுகின்றது. மேலும், மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 05.07.2000 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் மட்டுமே இவ்வுத்தரவின் தீர்வுக்கு பரிசீலிக்கப்பட்டுள்ளது என்றும், இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர ஆவணங்கள் மற்றும் வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் குறித்து அசல் வழக்கின் தீர்வின் போது பரிசீலிக்கப்படும் என்பதையும் இவ்வுத்தரவிலேயே தெளிவுப்படுத்தப்படுகின்றது.

14. இறுதியாக, மனுதாரர் / வாதியால் நான்கு இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், இவ்வழக்கு முடியும் வரை, மனுதாரரோ அவரது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்திலுள்ள பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச்சென்று A–அட்டவணை சொத்தில் பயிர் செய்வதை எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் தடை செய்யக்கூடாது என்றும், எதிர்மனுதாரர்களோ அவர்களது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்திலிருந்து A–அட்டவணை சொத்துக்கு செல்லுமாறு அமைத்துள்ள பாசன வாய்க்கால் மற்றும் பைப்லைனை சேதப்படுத்தக்கூடாது

*.. 12 ...*

என்றும் இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகின்றது. மனுதாரர், மனுவில் கோரியுள்ள இதர இரண்டு இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள், அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திற்குப் பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் முடிவு செய்து மனு பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 18–ஆம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G YUVARAJ
Digitally signed by G YUVARAJ
Date: 2022.04.18 14:40:01 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**<u>மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள்</u> :** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>** இல்லை

**<u>நீதிமன்ற சாட்சிகள்</u> :** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை

G YUVARAJ
Digitally signed by G YUVARAJ
Date: 2022.04.18 14:40:08 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**கூ.மா.உ.நீ., (மு.கூ.பொ.) ஆத்தூர்**

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 2/2020**

**----------------**

**அ.வ. எண் 150/2020**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 18.04.2022.

இடைக்கால உறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள், அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திற்குப் பின்னர் முடிவு செய்யப்படும் என்றும் முடிவு செய்து மனு பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

G YUVARAJ Digitally signed by G YUVARAJ Date: 2022.04.18 14:40:16 +0530

**கூ.மா.உ.நீ. (மு.கூ.பொ)**

**<u>I.A. No. 2/2020</u>**

**<u>IN</u>**

**<u>O.S. No. 150/2020</u>**

**<u>நாள் : 18.04.2022 :</u>** உத்தரவு பகரப்பட்டது. இறுதியாக, மனுதாரர் / வாதியால் நான்கு இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், இவ்வழக்கு முடியும் வரை, மனுதாரரோ அவரது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்திலுள்ள பொது கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் சென்று A–அட்டவணை சொத்தில் பயிர் செய்வதை எதிர்மனுதாரர்களோ அவர்–களது ஆட்களோ எவ்வகையிலும் தடை செய்யக்கூடாது என்றும், எதிர்மனுதாரர்–களோ அவர்களது ஆட்களோ மனு B–அட்டவணை சொத்திலிருந்து A–அட்டவணை சொத்துக்கு செல்லுமாறு அமைத்துள்ள பாசன வாய்க்கால் மற்றும் பைப்லைனை சேதப்படுத்தக்கூடாது என்றும் இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகின்றது. மனுதாரர், மனுவில் கோரியுள்ள இதர இரண்டு

*.. 2 ...*